மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஒன்றும் அரசிடம் இல்லையென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஹோமியோபதி கல்லூரி ஆசிரியர்கள்.

678—(*வினா எண் 8914) **திரு. ப. ந. இராமச்சந்திரன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) அரசினர் ஹோமியோபதி கல்லூரியில் பணிபுரியும் பேராசிரியர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் ஒரே சம்பளம் வழங்க அரசு உத்தரவு இட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ப. ந. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, அரசினர் ஓமியோபதி கல்லூரியில் பணிபுரிகிற பேராசிரியர்களுக்கும், விரிவுரையாளர்களுக்கும் நான்காவது சம்பள கமிஷனின் சிபார்சு அடிப்படையில் சம்பளம் மற்றும் சலுகைகளை வழங்குகிற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ? அந்தச் சலுகைகளை இப்போது வழங்குகிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: தலைவர் அவர்களே, நான்காவது சம்பள கமிஷனின் யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக அறிவார்கள். மூன்றாவது 'சம்பளக் கமிஷன்' பொறுத்தவரையில் பேராசிரியர்களுக்குச் சம்பளம் ரூ. 850—1,500 என்று இருந்தது. இப்போது நான்காவது சம்பளக் கமிஷன் பரிந்துரை மூலமாக ரூ. 1,800-ல் ஆரம்பித்து, ரூ. 2,900 வரையில் அது போகும். அதேமாதிரியாக லெக்சரர்களுக்கு ரூ. 750—1,350 சம்பளம் என்பது மூன்றாவது சம்பளக் கமிஷனின் பரிந்துரை. நான்காவது சம்பளக் கமிஷன் பரிந்துரை ரூ. 1,575—2,685.

1986 மே 6]

Modern Medicine டாக்டர்களுக்கு கொடுக்கக்கூடிய அந்த ஊதியத்திற்கு சரிசமமாக பரிந்துரை செய்யப்பட்டு அரசாங்கம் ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ப. ந. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, அரசினர் ஓமியோபதி கல்லூரியில் பணிபுரிகிற பேராசிரியர்களின் எண்ணிக்கை எத்தனை? விரிவுரையாளர்களின் எண்ணிக்கை எத்தனை? அங்கே விரிவுரையாளர்கள் போதவில்லையென்ற குறைபாடு மாணவர்கள் மத்தியில் இருக்கிறதா? அதைப் போக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அந்த எண்ணிக்கை விவரம் என்னிடம் இல்லையென்றாலும், அங்கே இருக்கிற பேராசிரியர்கள் போதுமென்ற குறிப்புதான் வந்திருக்கிறது. இருந்தாலும் அங்கேயிருக்கிற படுக்கைகள் எண்ணிக்கையை உயர்த்த வேண்டுமென்ற அந்த முயற்சியில் நாம் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறோம். அதுதான் இப்போது நமக்கு மிகத் தேவையான ஒன்றாகும்.

வெளி மாநிலங்களிலிருந்து உணவுப் பொருட்கள் கொள்முதல்.

679—(*வினா எண் 5246) திரு. சீ. சிவப்பிரகாசம்: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா :—

(அ) 1984—85-ம் ஆண்டில் மக்களுக்கு வினியோகிக்க வெளி மாநிலங்களிலிருந்து உணவுப் பொருட்கள் கொள்முதல் செய்யப் பட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) மற்றும் (ஆ) சுமார் 35 ஆயிரம் மெட்ரிக் டன் அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் சத்துணவு திட்டத்திற்கு பருப்பு வகைகள் வெளி மாநிலத்திலிருந்து டெண்டர் மூலம் வாங்கப்பட்டு இருக்கிறது.